செய்தி வெளியீடு எண்: 403 நாள்: 12.07.2012

**<u>அரசு திட்டங்கள் மக்களை விரைவாகச் சென்றடைய</u>**
**<u>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் முனைப்புடன் செயலாற்ற வேண்டும்.</u>**
**<u>மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஆய்வுக் கூட்டத்தில்</u>**
**<u>மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்</u>**
**<u>திரு. கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்கள் அறிவுரை</u>**

அரசுத் திட்டங்கள், மக்களை விரைவாகச் சென்றடைய செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் முனைப்புடன் செயலாற்றிட வேண்டும் என மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறைஅமைச்சர் திரு. கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பணி ஆய்வுக் கூட்டம் இன்று (12.07.2012) எழிலகத்தில் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குனர் முனைவர் பொ. சங்கர்,இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் பேசும்போது கூறியதாவது

‘‘மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசின் சாதனைகளை மக்களுக்கு எடுத்துச் செல்லும் இணைப்புப் பாலமாக செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும். மற்ற துறைகளைவிட செய்தித் துறையானது மனிதாபிமானமிக்கத் துறையாகும். இந்த ஆய்வுக் கூட்டத்தின் வாயிலாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பணியாகும். செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் தங்கள் பணிகளை மேலும் சிறப்புடன் ஆற்றிட இந்த ஆய்வுக் கூட்டம் பயனுள்ளதாக இருக்கும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஏழை எளியவர்களின் நலன்கருதி, எண்ணற்ற திட்டங்களை தந்துள்ளது. குறிப்பாக விலையில்லா அரிசி, தாலிக்குத் தங்கம், மடிக்கணிணி, மிக்சி, கிரைண்டர், மின் விசிறி, கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் போன்ற எண்ணற்ற திட்டங்களை தந்து நல்வாழ்வளித்து மக்களை பாதுகாத்து வருபவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுவந்த திட்டங்களை மக்களிடம் கொண்டு

சேர்க்கின்ற பொறுப்பு வாய்ந்த அலுவலர்களாக செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் விளங்கிட வேண்டும்.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பணி என்பது பிறத் துறை பணிகளைப் போல் அல்ல. முழு ஈடுபாட்டோடு அரசின் திட்டங்களை மக்களுக்குத் தெரியப்படுத்தி அதன் மூலம் மக்கள் பயனடையச் செய்யும் ஒப்பற்ற பணியாகும். எந்தெந்த வழிகளிலெல்லாம் அரசுத் திட்டங்களை மக்களுக்கு கொண்டு சேர்க்க முடியுமோ அவ்வழிகளில் எல்லாம் அரசு திட்டங்களை கொண்டு சென்று அவர்களுக்கு பயன் கிடைக்க செய்ய வேண்டிய பொறுப்பு மிகுந்த பணியாகும்.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் கிராமப் புறங்களில் நடைபெறும் அரசு வீடியோ படக்காட்சிகளை முறையாக ஆய்வு செய்து, ஆய்வின் போது மக்களின் மன நிலைகளை அறிந்து குறைகள் இருந்தால் மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்குக் கொண்டு சென்று குறைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். திரையரங்குகளில் அரசின் செய்திப் படங்கள் காண்பிக்கப்படுகின்றதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் மக்கள் நலத் திட்டங்கள் வாயிலாக அளப்பறிய சாதனைகள் நடந்து கொண்டே வருகிறது. மக்களது எண்ணங்களை நிறைவேற்றும் அரசாக அம்மா அவர்களின் அரசு விளங்குகிறது. செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் அரசுக்கு உண்மையாகவும் கடமை உணர்வோடும் பணியாற்றிட வேண்டும். நல்ல முறையில் பணியாற்றி அரசுக்கும் துறைக்கும் நல்ல பெயர் பெற்றுத் தர வேண்டும். உங்கள் பணி மென்மேலும் சிறக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி அமைகிறேன்'' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்கள்.

தமிழ் வளர்ச்சி,அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் மூ. இராசாராம், இ.ஆ.ப., அவர்கள் ஆற்றிய கருத்துரையில்,

‘‘மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திட்டங்களை மக்கள் அறியும் வகையில். வாகனங்கள் செல்ல இயலாத பகுதிகளுக்கும் மூன்றுச்சக்கர வாகனங்களில் அரசின் திட்டங்கள் குறித்து விளம்பரப் படுத்திடும் வகையில் புதிதாக வடிவமைக்கப்பட்ட வாகனத்தினை மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வுக் கூட்டத்துக்கு முன்பாக துவங்கி வைத்தார்கள்.

இதன் மூலம் பெரிய வாகனங்கள் செல்ல இயலாத பகுதிகளுக்கும் இம்மூன்று சக்கர வாகனம் சென்று மக்களுக்கு அரசின் திட்டங்கள் குறித்து விளம்பரப் படுத்துவார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் 2011 – 2012 ஆம் ஆண்டில் மூன்று கோடி ரூபாய் மதிப்பில் மடிக்கணிணிகள், டிஜிட்டர் கேமராக்கள், நகல் எடுக்கும் கருவிகள், வீடியோ புரொஜக்டர்கள் மற்றும் வாகனங்களை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு வழங்கிட அனுமதித்து, அவை வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில்( 2012 – 2013) 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் மின்னனு விளம்பரத் திரைகள் ( Digital Display Board) பொருத்தப்படவுள்ளது என்றும் செய்தித் துறை செயலர் குறிப்பிட்டார்கள். அதனைத் தொடர்ந்து

மக்கள் தொடர்பு என்ற தலைப்பில் மரபின் மைந்தன் திரு. முத்தைய்யா அவர்கள் உரையாற்றினார். மோட்டிவேஷன் (Motivation) என்ற தலைப்பில் சிறப்புப் பேச்சாளர் டாக்டர். ஆனந்த்பாபு அவர்கள் காணொளிக் காட்சி மூலம் விளக்கி பயிற்சி அளித்து உரையாற்றினார்.

காலை 10 மணி தொடங்கி மாலை வரை நடைபெற்ற இந்த ஆய்வுக்கூட்டத்தில், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணிகளான, செய்தி வெளியீடுகள், திரையரங்க ஆய்வு, வீடியோ படக்காட்சி, வெற்றிக் கதைகள், செய்தியாளர் பயணங்கள், பத்திரிகையாளர் கூட்டம், அரசு பொருட்காட்சி மற்றும் கண்காட்சி, தமிழரசு இதழ் மற்றும் காலிப் பணியிடங்கள் போன்றவை குறித்து மாவட்ட வாரியாக விரிவாக ஆய்வும் கலந்துரையாடலும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இணை இயக்குநர் திரு. தங்க. புகழேந்தி, துணை இயக்குநர்கள் திருவாளர்கள் எஸ்.பி. எழிலழகன், கு. தாணப்பா, திருமதி. டி.ஆர். ஜெயஸ்ரீ, உதவி இயக்குநர்கள் , செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த பிரிவு அலுவலகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை 9.**